# ஐரோப்பாவின் புராதன நாகரிகங்கள்

## உரோம் நாகரிகம்

1.ரோம நாகரிகம் அமைந்துள்ள நாடு யாது?

இத்தாலி

2. ரோம நாகரிகத்தின் பின்வரும் எல்லைகளை குறிப்பிடுக?

- கிழக்கில் – அட்றியாக் கடல்
- மேற்கில் - மத்திய தரைக்கடல்
- தெற்கில் - அயோனியன் கடல்
- வடக்காக- அல்ப்ஸ் மலை

3. இத்தாலியின் மத்தியின் ஊடாக வடக்கிலிருந்து தெற்காக நீண்டு செல்லும் மலையின் பெயர் யாது?

அப்பினைன் மலை

4. இம் மலையிலிருந்து ஊற்றெடுக்கும் நதி யாது?

தைபர் நதி

5. நாகரிகத்தின் ஆட்சிமுறை ஆரம்பத்திலிருந்து காலப்போக்கில் எவ்வாறு மாற்றம் பெற்று இருந்தது?

- ஆரம்பத்தில் கோத்ரம் அல்லது குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி முறை.
- பின்னர் முடிஆட்சி முறை
- பின்னர் சமூக ஆட்சியின்கீழ் கொன்சல் அதிகாரிகளிடம் ஆட்சி அதிகாரம் கையளிக்கப்பட்டது.
- அவர்களின் உதவிக்காக செனட்சபை ஒன்று இருந்தது
- பின்னர் ரோமப் பேரரசு உருவானது

6. ரோமப் பேரரசில் இணைந்து கொண்ட நாடுகள் எவை ?

G.R.H.L.C

ஸ்பானியா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் மத்தியதரைக் கடலை சூழவுள்ள பிரதேசங்கள்

7. புகழ் பெற்ற ரோம பேரரசர்களை குறிப்பிடுக?

ஜூலியஸ் சீசர்
அகஸ்டஸ் சீசர்

8. ஜூலியஸ் சீசர் பேரரசர் பற்றிய சிறப்புகளை தருக?

- இவர் போர் நடவடிக்கைகளில் திறமையுள்ள வீரர்
- ஆரம்பத்தில் ரோமப் பேரரசை தட்டி எழுப்பியவர்
- நேர்மையான ஆட்சியாளர்

9. ஒகஸ்டஸ் சீசர் பற்றிய சிறப்புகளை குறிப்பிடுக?

- இவர் இவரது ஆட்சிக்காலம் ரோமானிய வரலாற்றில் பொற்காலம்.
- பிரதான சின்னங்களான கொலோசியம் கெரகல்லா குளியல் தடாகம் இவரது காலநிர்மாணங்கள் ஆகும்.
- இவரது ஆட்சிக்காலத்தில் ரோமப் பேரரசுக்கு உட்பட்டு இருந்த பெத்லகேம் என்னும் இடத்தில் இயேசுநாதர் பிறந்தார்.

10. கிராம மக்களது வாழ்க்கை முறை பற்றி குறிப்பிடுக?

- இவர்களது சமூகத்தில் தந்தை குடும்பத் தலைவன் ஆகும்
- தந்தையே சகல விடயங்களையும் மேற்கொண்டு பொறுப்பாக இருந்த இருந்தார்.
- பெண்கள் உயர் பதவிகளை வகித்ததுடன், உயர் அந்தஸ்தும் கிடைக்கப்பெற்றது.
- பெண்கள் வைத்தியர்களாக இருந்ததுடன் தெய்வீகமானவர்களாகவும் கருதப்பட்டனர்.

11. ரோம் சமூகத்தில் காணப்பட்ட மூன்று பிரிவினர்களையும் குறிப்பிடுக?

- பிரபுக்கள்

- குடிமக்கள்
- அடிமைகள்

12 ரோமருடைய நகர நிர்மாணமும் வீடமைப்பும் எவ்வாறு காணப்பட்டது?

- திட்டமிட்ட முறையில் நகர்களை நிர்மாணித்தனர்
- பிரபுக்கள் ஆடம்பரமான வீடுகளில் வாழ்ந்து வந்தனர்
  - நீர் வசதி சுகாதார வசதி வீதி தொகுதி பாலம் கட்டும் கலைகளில் விசேட கவனம் செலுத்தினர்

13. ரோமானியர்கள் எத்தகைய விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபட்டனர்?
வண்டி ஓட்ட போட்டி நடத்தியமைகான ஆதாரம் கிடைத்துள்ளது

14. ரோமானியர்கள் எந்த நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டனர்?

இந்தியா சீனா இலங்கை போன்ற நாடுகளுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டனர்

15. இலங்கை ரோமானியர்களுடன் முற்காலத்தில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டமைக்கான சான்றாதாரம் யாது ?

இலங்கை பாதிகாபய மன்னர் ருவன்வெலிசாயவை அழகுபடுத்துவதற்கு ரோமாபுரியில் இருந்து கண்ணாடி மணிகள் பெற்றுக் கொள்ளப்பட்டதாக மூலாதாரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது

1 6.ரோம் நாகரீகத்தால் உலகுக்கு கிடைக்கப்பெற்ற கொடைகள் எவை?

- ஐரோப்பிய நாகரிகத்துக்கு பாலம் கட்டுதல் நீர் குழாய்கள் அமைத்தல் பெருந்தெருக்கள் அமைத்தல் போன்ற தொழில்நுட்பங்கள் கிடைக்கப்பெற்றன.
- கிறிஸ்தவ சமயம் ரோமப் பேரரசில் பரவிய பின்னரே உலகம் முழுவதும் பரவல் அடைந்தது.
- ரோமானிய சட்டங்கள்
- லத்தின் மொழி
- ரோமானிய கட்டிட நிர்மான கலை

****************

C/R.H.C

C/R.H.L.C